1967 நவம்பர் 25]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் அதை வழங்குவதாக உத்தேசம் உண்டா ? அல்லது எவ்வளவு காலத்திற்குள் அதை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த சப்-ஜெயில் மாற்றப்பட வேண்டுமென்ற கொள்கை அனைவராலுமே ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக் கிறது. அது Part II Scheme -இல் சேர்க்கப்பட்டு, நிதிவசதி ஏற்படும்போது, மேற்கொள்ளப்படும்.

*445 வினா—**திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் ஏற் படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) எங்கு, எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விவரங்கள் இன்னும் முடிவாக்கப்படவில்லை.

திரு. மா பா. சாரதி : தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டத் தில் ஏற்படுத்த உத்தேசம் இருக்கிறது ? அதையாவது இப்போது சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புழல் கிராமத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு, நிலம் எல்லாம் பெற முயற்சி எடுக்கப் பட்டு வருகிறது. அதற்கு ஆகக்கூடிய செலவுத் தொகை ஒதுக்கப் பட வேண்டும். நிதிவசதி ஏற்படும்போது இது மேற்கொள்ளப் படும்.

THIRU K. VINAYAKAM : In the event of opening of open air prisons, what type of prisoners will be housed there? Will they be criminals involved in murder, arson, looting and similar crimes —they should be prevented from escaping from such prisons—or will they be those sentenced for light offences?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குற்றங்களைப் பொறுத்த வரை யில், கைதிகளை அவரவர்களுடைய பண்புகளுக்கு ஏற்றவாறு சிறைச்சாலைகளில் பிரித்து வைக்கிறார்கள். புதிய சிறைச்சாலை உருவாக்கப்படும்போது எந்தெந்தக் கைதிகள் என்று தீர்மானிக்கப் படும்.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் போவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளை வசதி ஆகவும், சொகுசாகவும் ஆக்கிவிட்டால் அதிகம் பேர் குற்றம் செய்துவிட்டு சிறைச்சாலைக்கு வரக்கூடும் என்பதால் சிறைச்சாலைகளில் அதிக வசதிகளை ஏற்படுத்துவதை நிறுத்திவைக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா ?

(விடை இல்லை)